# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

**Case No:CC.84/2022**

**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முனீஸ்வரன்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **நாராயணசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1, 5 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**(08.10.2025)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் மேலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் கள்ளிக்குடி வடக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திருமங்கலம் நகராட்சியில் பணி செய்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரிகள் ஜெகன் மற்றும் ராஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். மற்ற எதிரிகள் பாண்டியராஜன், வினோத், கதிரேசன், மற்றும் மற்ற எதிரிகளை பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். அவர்களது பெயர் எனக்கு தற்சமயம் நினைவு இல்லை. எதிரிகள் மொத்தம் 10 பேர். அவர்கள் அனைவரும் எனது சம்மந்திக்கு உறவினர்கள் என்பதால் எனக்கு அவர்களை நன்கு தெரியும். கடந்த 26.01.2019 அன்று சுமார் மாலை 4 மணியளவில் வடக்கம்பட்டியில் முனியாண்டி கோவில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது எதிரிகள் 10 பேரும் திடிரென எனது வீட்டிற்கு வந்தார்கள். அப்போது நாங்கள் வீட்டில் தூங்கி கொண்டிருந்தோம். எனது சம்மந்தி நாராயணசாமி அவரது மனைவி தேவசேனா ஆகியோர்கள் தூங்கிகொண்டிருந்தார்கள். எதிரிகளில்

ஜெகன், போலிஸ்பாண்டி, அவரது மகன் வினோத் ஆகியோர்கள் சேர்ந்து கட்டையால் எனது வீட்டின் கதவை அடித்தார்கள். எதிரிகள் கதிரேசன், மற்றும் மற்றொரு எதிரி அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் எதிரிகளை அடையாளம் காணவேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.